In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 163/2023 | Prosecution witness P.W.9 |
| Name: Gunasekaran | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28-04-2025.

**(Accused 1 produced through V.C. A4, 6 are produced. Other Accused are present.)**

முதல் விசாரணை :-

நான் திண்டுக்கல், திருச்சி ரோட்டில் தீப்பாச்சியம்மன்கோவில் தெருவில் வசிக்கிறேன். இருசக்கர வாகனம் பழுதுபார்க்கும் வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன சரவணன் எனது சித்தி மகன். 20.07.2023 ம் தேதி நான் எனது ஒர்க்சாப்பில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது இரவு சுமார் 7.30 மணியளவில் என் பட்டறை முன்பாக நிறைய பேர் ஓடினார்கள். என்ன என்று விசாரித்தேன். அப்பொழுது சரவணன் என்ற பட்டறை சரவணனை கொலை செய்துவிட்டதாகச் சொன்னார்கள். உடனே நான் விமலா ஆஸ்பத்திரி அருகில் சென்று பார்க்கப்போனேன். நான் பார்த்தபோது சரவணன் குப்புற மண்டை சிதைந்த நிலையில் கிடந்தார். அப்போது போலீசார் அங்கு வந்தனர். ஆம்புலன்ஸ் வந்தது. சரவணன் உடலை எடுத்துக்கொண்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனை கொண்டுசென்றார்கள். அன்று இரவு முழுவதும் நான் மருத்துவமனையில் இருந்தேன். மறுநாள் காலை போலீசார் மற்றும் மருததுவர்கள் மருத்துவமனையில் இருந்து இறந்த சரவணனின் பிரேதத்தின் மீது விசாரணை செய்தார். அவ்வாறு விசாரணை செய்து எழுதிக்கொண்ட அறிக்கையில் நான் கையெழுத்து செய்தேன். பின்னர் பிரேத பரிசோதனை செய்துவிட்டு சரவணனின் பிரேதத்தை நல்லடக்கத்திற்காக கொடுத்தார்கள்.

போலீசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

**7,8,9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

21.07.2023 ம் தேதி காலையில் போலீசார் என்னை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலுசார் விசாரணையில் நான் பட்டறையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது ஆட்கள் ஓடிக் கொண்டிருந்த விவரத்தையும் நான் அவர்களை விசாரித்த விவரத்தையும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது போலீசார் அங்கிருந்தனர் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் அன்றைய தினம் இரவு முழுவதும் மருத்துவமனையில் இருந்த விவரத்தை சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. இறந்துபோன சரவணன் எனக்கு உறவினர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1,3,45,6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – 7,8,9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.04.28 17:07:03 +0530

Principal District Judge,
Dindigul.